**தலைப்பு 20 - தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 20 – தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 24 ஆந் திகதி ஆணைக்குழுவின் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது

கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராமை. | 2.2.1 |
| | | 2. பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் | 2.2.2 |
| | | 3. நிதியேற்பாடுகள் சேமிக்கப்படுகின்றமை | 2.5 |
| | | 4. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.7 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. இணங்காமைகள் | 2.6 |
| | | 2. தீர்க்கப்பட்டிராத கணக்காய்வு பந்திகள் | 2.4 |

127(3) ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும்

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 ஆணைக்குழுவின் பிரதான பணிகள்

---

(அ) வாக்காளர்களை பதிவு செய்தல் மற்றும் வாக்காளர் பெயர்ப்பட்டியலை தயாரித்தல்.

(ஆ) சனாதிபதி தேர்தல், மக்கள் கருத்துக் கணிப்பு, பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களை நடாத்துதல்.

(இ) அனைவருக்குமான வாக்குரிமை மற்றும் உரிமை தொடர்பில் வாக்காளர்களை அறிவூட்டல்.

### 2.2 செயலாற்றல்

---

#### 2.2.1 திட்டமிடல்

---

ஆணைக்குழு 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்திருக்கவில்லை.

#### 2.2.2 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு துரிதமாக தீர்வினை வழங்கும் நோக்கில் தேர்தல்கள் முறைப்பாடு முகாமைத்துவ முறைமையினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு மொத்த மதிப்பீட்டுப் பெறுமதியான

ரூபா 1,952,500 தொகை ஒரு தடவையில் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த செயற்திட்டம் 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், அந்த பணிகளை 2018 யூன் 08 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்ய முடியாதிருந்தது.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

### குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

------------------------------------------------------------

பின்வரும் சொத்துக்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(i). ரூபா 7,500,000 பெறுமதியான கெப் வண்டியொன்று 2015 செப்தெம்பர் 08 ஆந் திகதி விபத்திற்குள்ளாகி ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலைக்குள்ளாகி 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று நிறுவக வளாகத்தினுள் தரித்து வைக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்திற்காக முழுச் சேதத்தின் அடிப்படையில் ரூபா 5,500,000 தொகையினை செலுத்துவதற்கு குறித்த காப்புறுதி கம்பனி 2018 யூலை 17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தியிருந்ததுடன், பதிவினை இரத்துச் செய்யும் பணிகள் நிறைவடைந்திருக்கவில்லை.

(ii). 03 பிரதேச செயலகங்களுக்காக ரூபா 2,645,500 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 25 வளிச்சீராக்கி இயந்திரங்கள் மின்னிணைப்பு பணிகள் தாமதமடைந்தமையின் காரணமாக சுமார் 03 மாதகாலமாக விளைவற்றுக் காணப்பட்டது. 2018 யூலை 24 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் 12 வளிச் சீராக்கிகளுக்கான மின் இணைப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii). வாக்காளர் பெயர்ப்பட்டியலை தயாரிப்பதற்கு உரியதாக ஆணைக்குழுவின் கணனி தரவுக் கட்டமைப்பில் நிலவுக் தரவுகளின் பாதுகாப்பிற்காக இடர் மீளமைப்பு நிலையமொன்று ஹம்பாந்தோட்டை தேர்தல்கள் அலுவலகத்தில் அமைப்பதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 11.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தீயணைப்பு பாதுகாப்பு கட்டமைப்பின் பகுதிகளை பொருத்துவதற்கு தாமதமடைந்தமையால் குறித்த உபகரணத்தை (Serves) பொருத்துவதற்கு 2018

யூலை 13 ஆந் திகதி வரையிலும் 07 மாதங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

(iv). தேர்தல்கள் முறைப்பாடு முகாமைத்துவ கட்டமைப்பினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 891,000 பெறுமதியான 27 தொலைக்காட்சி பெட்டிகள் உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படாது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**2.4 தீர்வு செய்யப்பட்டிராத கணக்காய்வு பந்திகள்**

ஆணைக்குழுவிற்குரிய 2016 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் 3.3 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 966,969 தொகை செலவிடப்பட்டு வாக்குப் பெட்டி களஞ்சியத்தினூடான ஹீன் எல பாதுகாப்பகத்திற்குரிய காணியை ஆணைக்குழுவிற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளதுடன், இதுவரையிலும் சுவீகரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு மீளாய்வாண்டினுள் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **செலவு வகை** | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| **2013** | மீண்டுவருபவை | 1,328.90 | 1,313.67 | 15.23 | 1.15 |
| | மூலதனம் | 41.00 | 40.61 | 0.39 | 0.95 |
| | **மொத்தம்** | **1,369.90** | **1,354.28** | **15.62** | **1.14** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2014** | மீண்டுவருபவை | 2,113.45 | 2,099.12 | 14.33 | 0.68 |
| | மூலதனம் | 81.00 | 79.71 | 1.29 | 1.59 |
| | **மொத்தம்** | **2,194.45** | **2,178.83** | **15.62** | **0.71** |
| **2015** | மீண்டுவருபவை | 5,913.43 | 5,802.76 | 110.67 | 1.87 |
| | மூலதனம் | 52.97 | 46.15 | 6.82 | 12.88 |
| | **மொத்தம்** | 5,966.40 | **5,848.91** | **117.49** | **1.97** |
| **2016** | மீண்டுவருபவை | **3,581.80** | 577.56 | 3,004.24 | 83.88 |
| | மூலதனம் | 57.51 | 55.28 | 2.23 | 03.88 |
| | **மொத்தம்** | 3,639.31 | **632.84** | **3,006.47** | **82.61** |
| **2017** | மீண்டுவருபவை | **4.,456.01** | 788.62 | 3,667.39 | 82.30 |
| | மூலதனம் | 110.83 | 105.86 | 4.97 | 4.48 |
| | **மொத்தம்** | 4,566.84 | **894.48** | **3,672.36** | **80.41** |

மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கல்வி அமைச்சுடன் இணைந்ததாக மக்கள் கருத்துக் கணிப்பு தொடர்பாக மாணவர்களை அறிவூட்டும் செயலமர்வினை நடாத்துவதற்காக குறைநிரப்பு மதிப்பீடொன்றினூடாக ரூபா 4,800,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.6 இணங்காமைகள்**

----------------------------

நிதிப்பிரமாணம் 1647(ஆ) இன் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சொந்தமான வாகனங்களும் உபகரணங்களும் தொடர்பாக முழு மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்த மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.7 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

----------------------------------------------------------------------------------------

**சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

ஆணைக்குழுவின் சொத்துக்கள் தொடர்பில் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

**2.8 மனிதவள முகாமைத்துவம்**

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளனி வேதனம் ஆகியவற்றுக்கான செலவினம்**

---

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 52 | 49 | 03 | - |
| (ii) | இரண்டாம் மட்டம் | 21 | 09 | 12 | - |
| (iii) | மூன்றாம் மட்டம் | 476 | 420 | 56 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 222 | 190 | 32 | - |
| (v) | அமைய/ஒப்பந்த | 01 | 809* | - | 808 |
| | **மொத்தம்** | **772** | **1477** | **103** | **808** |

* மீளாய்வாண்டின் இறுதியளவில் 103 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தேர்தல் பணிகளுக்காக அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 682 ஊழியர்களும், 127 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுமாக 809 பேர் 2017 திசெம்பர் 05 ஆந் திகதி முதல் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்